# T4




# சாங்கி விமான நிலையத்தின் புத்தம் புதிய முனையத்தைப்

## பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை

## 4வது முனையத்துக்குச் செல்லும் விமான நிறுவனங்கள்

6 நிறுவனங்களின் விமானங்கள் 31 அக்டோபர் 2017 முதல் 7 நவம்பர் 2017 வரை 4வது முனையத்துக்குச் செல்லவிருக்கின்றன. அனைத்து விமானங்களும் காலை 4.00 மணி முதல் இயங்கத் துவங்கும். விமான நேரங்கள் மற்றும் முனையங்கள் பற்றிய அண்மைத் தகவல்களுக்கு, அன்புகூர்ந்து **http://t4.changiairport.com/airlines-guide** இணையப்பக்கத்தைப் பார்க்கவும்.

| 31 அக்டோபர் முதல் | | 2 நவம்பர் முதல் | | 7 நவம்பர் முதல் | |
|---|---|---|---|---|---|
| Cathay Pacific | Korean Air | Cebu Pacific | Spring Airlines | AirAsia (AK, FD, QZ, Z2) | Vietnam Airlines |
| காலை 4.00 மணி | மாலை 4.30 மணி | காலை 7.30 மணி | இரவு 8.30 மணி | காலை 5.30 மணி | காலை 10.00 மணி |

## பயண ஆயத்தப் பதிவுசெய்தல் விருப்பத்தேர்வுகள்

தினசரி காலை 4.00 மணி முதல் பின்னிரவு 12.30 மணி வரை 4வது முனையத்தின் 6வது வரிசையில் சுய-சேவை மற்றும் வழக்கமான பயண ஆயத்தப் பதிவுசெய்தல் ஆகிய இரு விருப்பத்தேர்வுகளும் உண்டு.

## ஓய்விட வசதி

தகுதியுடைய பயணிகளுக்கு 'கேத்தே பசிபிக்' முதல் மற்றும் வணிக வகுப்பு ஓய்விட வசதி உண்டு. ஒவ்வொரு முறையும் பணம் செலுத்திப் பயன்படுத்தும் ஓய்விடம் மற்றும் பிளாஸம் (Blossom) ஓய்விடம் ஆகியவை அனைத்துப் பயணிகளுக்கும் கிடைக்கும்.

CHANGI
airport singapore
*the feeling is first class*

# 4வது முனையத்தை அடைதல் மற்றும் அதிலிருந்து வருதல்




## பொதுப்பேருந்து மூலம்

பேருந்துச் சேவைகள் 24, 27, 34, 36, 53, 110 மற்றும் 858

## சீருந்து, வாடகைச் சீருந்து மூலம்

- தீவு விரைவுச்சாலை – வெளிவழி 1-ல் உள்ள நான்காம் முனையத்துக்குச் செல்லும் பிரிவுச்சாலையை (ஸ்லிப் ரோடு) எடுக்கவும்
- கிழக்குக் கடற்கரை விரைவுச்சாலை – இருவழி பெருஞ்சாலையிலுள்ள T4 செல்லும் வெளிவழியை எடுக்கவும்

## இரயில் மூலம்

- சாங்கி இரயில் நிலையத்தில் இறங்கவும்.
- T2 வருகை மண்டபத்தில் கதவு 1-க்குச் செல்லவும், 24-மணி நேர இலவசச் சிறு தூரப் போக்குவரத்துப் பேருந்தில் ஏறவும்.
- பயணம் 10 நிமிடங்கள் பிடிக்கும்.
- உத்தேசிக்கப்பட்ட சிறு தூரப் போக்குவரத்துப் பேருந்துக்காகக் காத்திருக்கும் நேரம் நள்ளிரவு 12:00 மணி வரை 10 நிமிடங்களாகவும் நள்ளிரவு 12:00 மணி முதல் அதிகாலை 5:30 மணி வரை 20 நிமிடங்களாகவும் இருக்கும்.

## முனைய இருப்பிட வரைபடம்



## துரிதமான பயண ஆயத்தப் பதிவு

4வது முனையம் தான் சாங்கி விமான நிலையத்தில் பயண ஆயத்தப் பதிவு செய்தல், சரக்கிடுதல், குடி நுழைவு மற்றும் விமானமேறுதல் ஆகிய அனைத்துச் தொடர்புப் புள்ளிகளிலும் துரித மற்றும் தடங்களற்ற சுய-சேவை விருப்பத்தேர்வுகளை முதன் முதலாக வழங்குகிறது. உங்கள் வசதிக்கேற்ப பயண ஆயத்தப் பதிவு செய்து மகிழுங்கள். மேலும் விவரங்களை **http://t4.changiairport.com/FAST-guide** இணையப்பக்கத்தில் பாருங்கள்.

## பாதுகாப்புச் சோதனை

அதிநவீன முப்பரிமானச் சோதனைத் தொழில் நுட்பம் உங்கள் மடிக்கணினிகள் மற்றும் டேப்லட் கணினிகளை உங்கள் பையினுள்ளேயே வைத்திருக்க அனுமதிப்பதால் தடைகளற்ற, தொந்தரவில்லாப் பாதுகாப்புச் சோதனை சாத்தியமாகிறது. நீர்மங்கள், காற்றுநீர்மத் தெளிப்பான்கள் மற்றும் கூழ்மக்களிமங்கள் உட்பட்ட கைச்சுமைகளுக்கான விதிகள் பொருந்தும்.



## முக்கிய வசதிகள்

### பொருட்கொள்முதல் மற்றும் சாப்பாடு

- 4வது முனையத்தில் 80-க்கும் மேற்பட்ட வெளிவிற்பனைக் கடைகள் உள்ளன, அவற்றில் 20-க்கும் மேற்பட்ட வணிகச் சின்னங்கள் சாங்கி விமான நிலையத்துக்குப் புதியவை.
- வரி-இல்லா வகைகள் அனைத்தும் குடி நுழைவை அடுத்து உடனடியாக ஒரு ஒற்றை ஒருமுகப்படுத்தப்பட்ட வரி-இல்லா மண்டலத்தில் இருக்கின்றன.
- சாங்கியில் புதிய உணவு மற்றும் பான வெளிவிற்பனைக் கடைகள் பயன்பாட்டுக்கு இருக்கின்றன.
- பாரம்பரிய சுவையுணவுகள் அல்லது உள்ளூர் உணவுகள் கடையில் உணவு உட்கொண்டு, மரபுடைமை மண்டலத்தில் நினைவுப்பொருள் வாங்கி மகிழுங்கள்.
- கடை மற்றும் உணவகங்களின் முழுத்தொகுப்பை **http://t4.changiairport.com/shop-and-dine-guide** இணையப்பக்கத்திலுள்ள விவரப்புத்தகத்தில் பார்க்கவும்.

---

### 4வது முனைய அனுபவம்

4வது முனையத்திலுள்ள பிரத்தியேகமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கலை மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் மூலம் ஒரு கண்கவர் மற்றும் ஆழ்ந்த நாடகவியல் அனுபத்தைப் பெற்று மகிழுங்கள்.

- Petalclouds என்பது மத்திய மண்டபத்தில் 200 மீட்டர் நீண்டுள்ள ஒரு நகரும் சிற்பம். பாரம்பரிய இசைக்கு ஏற்றபடி அமையும் அதன் நளின அசைவுகள் உங்களை மனம் மயங்கச் செய்யும்.
- மையப்படுத்தப்பட்ட பாதுகாப்புப் பகுதியில் அமைந்த, இம்மெர்சிவ் (Immersive) சுவர் என்பது ஒரு 70 மீட்டர் LED திரையாகும், இது வரிசையில் நிற்கும் பயணிகளை வெகுவாக மகிழ்விக்கும்.
- மரபுடைமை மண்டலத்தில் 1880 முதல் 1950 வரை சிங்கப்பூரின் கடைவீடு கட்டடக் கலையில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியைக் கண்டுகொள்ளுங்கள்.
- மரபுடைமை மண்டலத்தில், 'பெரானாகன் காதல் கதை' எனும் 1930களில் இரு அக்கம் பக்கக் குடும்பங்களுக்கு இடையே இருந்த சாத்தியமற்ற காதலைப் பற்றிய ஆறு-நிமிடக் கலாச்சார குறு-நாடகக் காட்சியைக் கண்டுகளியுங்கள்.
- **http://t4.changiairport.com/experience-guide** இணையப்பக்கத்தில் 4வது முனையத்தில் பெறும் அனுபவங்கள் பற்றிய மேலும் விவரங்களைப் பார்க்கவும்.

# 4வது முனையத்தைச் சுற்றி வருதல்

பயண இடைநிறுத்தம்

2M தளத்திலுள்ள 'கேத்தே பசிபிக்' முதல் மற்றும் வணிக வகுப்பு ஓய்விடம் மற்றும் ஒவ்வொரு முறையும் பணம் செலுத்திப் பயன்படுத்தும் பிளாஸம் ஓய்விடம்

பொது

2M தளத்திலுள்ள உணவு மற்றும் பானங்களுக்கு அணுக்கம்

ஈர்க்கும் அம்சங்கள்

- PETALCLOUDS
- மரபுடைமை மண்டலம்
- இம்மொர்சிவ் சுவர்
- STEEL IN BLOOM

உணவு

பொருட்கொள்முதல்

T2 மற்றும் எம்ஆர்டி-க்குச் செல்லும் சிறு தூரப் போக்குவரத்துப் பேருந்து

தகவல்

eTRS வரி திரும்பப் பெறல்

